பொத்துவில் பிரதேச சபை
அம்பாரை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 14 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்ளிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து பொத்துவில் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரையான காலப்பகுதிகளில் பல்வேறு நிறுவனங்களினால் அன்பளிப்புச் செய்யயப்பட்டு சபைக்கு உரிமைமாற்றப்பட்ட 10 வாகனங்கள், 05 உழவு இயந்திரங்கள், 09 இழுவைப் பெட்டிகள் மற்றும் பவுசர் ஆகியவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டி ருக்கவில்லை.

(ஆ) 2011 தொடக்கம் 2016 ஆண்டு வரையான காலப்பகுதிகளில் யுனொப்ஸ், அபான்ஸ் மற்றும் நெல்சிப் நிறுவனங்களினால் முறையே வழங்கப்பட்ட 03 குளிரூட்டிகள், 02 தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் குளிர்சாதனப்பெட்டி என்பவற்றின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டி ருக்கவில்லை.

1.3.2 ஆவணச் சான்றுகள் இன்மை

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பாக 1992 ஆம் ஆண்டின் படியான கணக்கு மீதிகளாக முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 4,736,234 கூட்டு மொத்தத் தொகையான் 05 விடயங்கள் தொடர்பில் விபரமான ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | தொகை | இணங்காமை |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | - | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், மூன்று வருடங்களுக்கு மேலாக அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பெறுகை வழிகாட்டிகள் 2006 இன் பிரிவு 5.4.12 | 19,697 | மீளாய்வாண்டு இறுதிவரை வழங்குநர்களுக்குச் செலுத்தப்பட்ட பெறுமதிசேர் வரித்தொகை தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கான ஒரு பிரதியுடன், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 290,821 | பதினான்கு வைப்புகள் இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த வைப்புக்களாக காணப்பட்ட போதிலும் சபை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (ஈ) 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கை | - | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபைகளின் சிபாரிசின்படி அழிக்கப்படவேண்டிய 236 இருப்புப் பொருட்கள் மற்றும் 35 நூல்நிலையப் புத்தகங்கள் மற்றும் விற்பனை செய்யப்பட வேண்டிய 220 பொருட்கள் தொடர்பில் 2018 செப்தெம்பர் 21 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்கான மெய்யாய்வுச்சபை அறிக்கையின் பிரதி கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | 683,300 | சபையின் கணனிகள், கணனி மென்பொருட்கன் மற்றும் கணனி உதிரிப்பாகங்களினை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுகளின்படி 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 10,968,249 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 7,062,954 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 3,905,295 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், அறவிடப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவைகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) வீதவரிகளும் வரிகளும் | - | 3 | 3 | - | - | - | - | - |
| (ii) வாடகை | 6,256 | 6,455 | 6,168 | 2,515 | 7,224 | 5,869 | 5,805 | 2,207 |
| (iii) உரிமைக் கட்டணம் | 2,268 | 2,829 | 2,829 | - | 2,280 | 2,103 | 2,103 | - |
| (iv) ஏனைய வருமானம் | 18,280 | 15,052 | 15,052 | - | 21,826 | 9,693 | 9,693 | - |

2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றல்

2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 26,546,915 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 24,053,014 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 91% ஆக காணப்பட்டிருந்தது.

2.2.3 வீதவரிகள் மற்றும் வரிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 656 வர்த்தக நிலையங்கள் மற்றும் 9,983 வீடுகள் மீது 2003 ஆம் ஆண்டு தொடக்கம் வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 5,319,500 தொகையான வருமானம் இழக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியிலிருந்து பெற்ற வருமானத்தின் 01% யை வரியாக அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.4 வாடகை அறவீடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 33 பொதுச் சந்தை கடைகளுக்கான மீளாய்வாண்டுக்கான வாடகை நிலுவை ரூபா 562,950 தொகையினை 2018 செப்தெம்பர் 21 ஆந் திகதி வரை அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1992 முதல் 2013 ஆம் ஆண்டு வரை நிலுவையாகவுள்ள இறைச்சிக் கடை குத்தகைப் பணமாகிய ரூபா 1,676,663 தொகை மற்றும் மீளாய்வாண்டுக்கான இறைச்சிக் கடை குத்தகை நிலுவை ரூபா 95,450 ஆகியவற்றை அறவிடுவதற்கு 2018 செப்தெம்பர் 21 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள கிராமங்களுக்கு சபையின் குடிநீர் பவுசர் மூலம் இலவசமாக குடிநீர் வழங்கியமை தொடர்பில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு ரூபா 158,623 தொகை செலுத்தவேண்டிய போதிலும் ரூபா 168,461 செலுத்தியமையினால் ரூபா 9,838 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் செயற்திட்டங்களிடமிருந்து பெறப்பட்டு இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 5 வாகனங்கள், 1 பவுசர் மற்றும் 3 இழுவைப் பெட்டிகள் ஆகியவற்றினை சபையின் பெயருக்கு உரிமை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் வேலையை விட்டு நீங்கிய 15 ஊழியர்களின் கடன் நிலுவை ரூபா 550,726 ஆனது 02 தொடக்கம் 14 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாதிருந்தன. இந்நிலுவைத் தொகையினை பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது அவர்களிற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ 2018 செப்தெம்பர் 21 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் அதிகாரத்திற்குற்பட்ட பகுதிகளிலுள்ள சபைக்குச் சொந்தமான 46 காணிகள் மீளாய்வாண்டு இறுதிவரை சபையின் பெயரிற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 16 செலவு விடயங்களுக்கு வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி போதாமையால், 18 தடவைகளில் ரூபா 1,820,000 தொகையானது வகைமாற்றம் செய்யப்பட்டுள்ளமையானது வரவுசெலவுத்திட்டமானது வினைத்திறனற்ற முறையில் தயாரிக்கப்பட்டுள்ளமையைக் காட்டுகின்றது.

4.2 தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டில் பிரதேச சபைகளை வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஐந்து உள்ளக வீதிகளுக்கு கிறவல் இடுவது தொடர்பில் 2016 ஆம் ஆண்டு 440 கியூப் கிறவல்களிற்கு ரூபா 1,100,000 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் வேலை மேற்பார்வையாளர் ஆகியோரின் எழுத்து மூலமான உறுதிப்படுத்தலின்படி 297 கியூப் கிறவல் மாத்திரமே வீதிகளுக்கு இடப்பட்டதாக தெரிவித்துள்ளனர். இதன்படி ரூபா 357,500 பெறுமதியான 143 கியூப் கிறவல்கள் சபையால் மேலதிகமாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2011 முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சபையில் கடமை புரிந்த 04 ஊழியர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்ட ரூபா 48,554 கடன் தவணைப்பணம் 2018 செப்தெம்பர் 21 ஆம் திகதி வரை கொடுத்துத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் தொழில் வாய்பை வழங்கும் நோக்குடன் 2008 ஆம் ஆண்டு உலக தரிசன நிறுவனத்தின் ரூபா 1,231,600 நிதியையும் 2011 ஆம் ஆண்டு சபையின் ரூபா 1,612,127 நிதியையும் பயன்படுத்தி காகித மீள்சுழற்சி நிலையம் நிர்மாணிக்கப்பட்ட போதிலும், இன்று வரை பயன்படுத்தப்படாமையால் அழிவுற்ற நிலையில் காணப்படுகின்றது.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்.<br>ii. சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம் | திண்மக் கழிவுகளை தரப்படுத்தி சேகரித்தல் |